[1978 மார்ச் 3

சிம்மணப்பூதூர் ஏரி வாய்க்கால்கள்.

* 363 வினா—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஊத்தங்கரை வட்டம், மகனூர்பட்டி ஊராட்சியிலுள்ள, ஏக்கூர் ஏரி, மகனூர்பட்டி ஏரி, ஆரியகவுண்டன் அணை இவைகளுக்கு வடாற்காடு மாவட்டம், சிம்மணப் பூதூர் ஏரியிலிருந்து நீர் வரும் வாய்க்கால்கள் பழுது பார்க்கப்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) பழுதான பகுதியைச் சீரமைப்பதற்குரிய மதிப்பீடு ஒன்று சேலம், தர்மபுரி மேற்பார்வை பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

திரு. எம். அண்ணாமலை : ஊத்தங்கரை, மகனூர்பட்டி ஊராட்சியிலுள்ள, ஏக்கூர் ஏரி, மகனூர்பட்டி ஏரி, ஆரியக் கவுண்டன்அணை இவைகளுக்கு வடாற்காடு மாவட்டம், சிம்மணப் பூதூர் ஏரியிலிருந்து நீர் வரும் வாய்க்கால்கள் பழுது பார்க்கப் படுவதாகச் சொன்னார்கள். வாய்க்கால் குறுகி உள்ளதாலும் அணை கோடியிலிருந்து பூசக்கவுண்டன் ஏரிக்கு வரக்கூடிய அந்த வாய்க்கால் மிகவும் பழுதுபட்டுள்ளதால் மழை காலங்களில் வரும் தண்ணீர் கரைபுரண்டு விளைநிலங்களையும் தோட்டங்களையும் அழிக்கின்ற ஒரு நிலை இருப்பதோடு மேற்கண்ட ஏரியில் தண்ணீரற்று வறட்சிப் பகுதியாக உள்ளது. ஆகவே, இதைச் சீர்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசுக்கு உத்தேசம் இருப்பதனால்தான் அந்த வாய்க்காலை சீரமைப்பதற்கு ஒரு மதிப்பீடு தயாரித்து இருக்கிறார்கள். அதற்கு ரூ. 27,000 செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் பைசல் ஆகாமல் உள்ள வழக்குகள்.

* 364 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சென்னை உயர்நீதி மன்றத்தில் கடந்த பத்தாண்டுக்கு மேலாகவும் பைசல் ஆகாத வழக்குகள் எத்தனை உள்ளன?